**முதலமைச்சராக இருந்து வழிநடத்தி, இந்தத் துறையிலே எனக்குப் பணியாற்ற வாய்ப்பு தந்த எங்கள் தலைவருக்கு நன்றி!**

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ரூ.1.25 லட்சம் கோடி செலவில்

# நகராட்சி நிர்வாகத் துறையில் மாபெரும் பணிகளை மனநிறைவோடு செய்துள்ளோம்!

## சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான உரையில் – முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பெருமிதம்!



**சென்னை, ஆக. 27-**

**சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, “கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 1.25 லட்சம் கோடி செலவில் நகராட்சித் துறையில் மாபெரும் பணிகளை மனநிறைவோடு செய்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் மூத்தவரான ஐயா தந்தை பெரியார் அவர்களிடம் நாங்கள் நேரடியாகப் பேசிப் பழகியதில்லை; ஆனால், திருச்சியில் அவருடைய அலுவலகம் மற்றும் தங்கும் இடம் இருந்தபோது அடிக்கடி அவர் வேனில் செல்லும்போது நாங்கள் பார்த்திருக்கிறோம்; பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு எங்களுடைய லால்குடி தொகுதி, புள்ளம்பாடியில் பேசுகிறார். கடைசி 5 நிமிடங்கள் மட்டுமே உள்ளன. அப்போது மு.க.து. நடராசன் அவர்களை ஆதரித்து அண்ணா அவர்கள் பேசினார். அவர் பேசியபோது மேலே கருடன் பறந்தது. சிரித்துக் கொண்டே அண்ணா அவர்கள் சொன்னார்கள். “ஆத்திகர்கள் பாஷையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைப்பதை யாராலும் தடுக்க முடியாது” என்று சொன்னார்.

### எங்களை உருவாக்கியவர் கலைஞர்

அதுதான் ஆரம்பம். அதன்பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று கள்ளக்குடியிலே டால்மியா நிறுவனம் கட்டியிருக்கிற தொழிலாளர் குடியிருப்பை திறந்து வைத்து, உரையாற்றினார்கள். அப்போதுதான் அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்தோம். அப்போது எனக்கு சுமார் 15 வயது இருக்கும். அதன்பிறகு கலைஞர் அவர்களை 1973 ஆம் நடைபெற்ற ஆண்டு தேர்தலிலிருந்து தொடர்ந்து அவருடைய இறுதிநாள் வரை அவருடனே இருந்து பணியாற்றியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

## ‘திருப்புகழ் கமிட்டி’ அளித்த 161 இலக்குகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றம்!

முதன்முதலாக 1986 ஆம் ஆண்டு புள்ளம்பாடியிலே பொதுத்தேர்தல். ஊராட்சி ஒன்றியத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தேர்தல். அதிலே அன்றைக்கு இருக்கின்ற மாவட்ட செயலாளர், S.K. வடிவேல் அவர்களும், ஆதிமூலம் அவர்களும், கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பரிந்துரையின்பேரில் கலைஞர் அவர்கள், எனக்கு அத்தேர்தலில் போட்டியிடக்கூடிய அந்த வாய்ப்பைத் தந்தார்கள். எனவே, நான் சந்தித்த முதல் பொதுத் தேர்தல் என்பது 1986 ஆம் ஆண்டுதான். அவர்கள் என்னை வெற்றிபெற வைத்தார்கள். லால்குடியிலே நான்குமுறை தேர்தலிலே நிற்பதற்கு அன்றைக்கு மாவட்டச் செயலாளராக இருந்த செல்வராஜ் பரிந்துரையின்பேரில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, நாங்கள் சட்டமன்றத்தில் லால்குடியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்போதும் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்திலே தேர்தலிலே நிற்பதற்கு அனுமதி தந்தார்கள்.

1996 ஆம் ஆண்டுலிருந்து தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு, 2006 ஆம் ஆண்டு என 6 முறை திருச்சி மேற்கு தொகுதியிலே— கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்டு, கலைஞர் அவர்களால் எங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டு, சட்டமன்றத் தேர்தலிலே நின்றோம். கலைஞர் அவர்கள்தான் எங்களுக்கு எல்லாம். நாங்கள் ஒன்றியத்தில் தலைவராக இருந்து, அமைச்சராக உடனடியாக பொறுப்பேற்ற காரணத்தால், எங்களை கலைஞர் அவர்கள் அழைத்து, “உனக்கு கோப்புகளைப் பார்க்கத் தெரியுமா?” என்று கேட்டார்கள். “ஒன்றியத்திலிருந்தபோது ஓரளவுக்கு பார்ப்பேன்” என்று பதில் சொன்னேன். அப்போது, அருகிலே அமர வைத்து கோப்புகளை எவ்வாறு பார்க்க வேண்டுமென்று அவர் சொல்லிக்கொடுத்து, எங்களை வளர்த்தவர்.

அதோடு மட்டுமல்ல, ஒரு காலக்கட்டத்தில் அரசியலிலே எதிரிலே இருக்கிறவர்கள் வழக்கு தந்து, நான் சிறையிலே இருக்கிறபோது, என்னோடு இருந்தவர்கள் எனக்கு போட்டியாக நான் போட்டியிடுகின்ற இடத்தைக் கேட்டபோது, இன்றைக்கு இருக்கின்ற எங்களுடைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், கலைஞரிடம் சொல்லி, “நேரிலே சிறையிலே அவரைப் பார்த்துவிட்டு வந்தேன். அவரே நிற்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்” என்று சொல்லி, அந்த சங்கடம் வந்த நேரத்திலும் தொடர்ந்து எனக்கு ஆதரவு தந்தவர் முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணன் தளபதி அவர்கள்தான் எங்களை வளர்த்து ஆளாக்கினார். இவ்வளவு பெரிய இலாகா. முதலமைச்சர், ஏற்கெனவே கலைஞர் அவர்கள் பார்த்த போக்குவரத்துத் துறையும் தந்தார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பார்த்த உள்ளாட்சித் துறையைத் தந்தார். இன்றைக்கு அந்தத் துறையை நமது முதலமைச்சர் அவர்களே பார்க்கக்கூடிய அளவுக்கு ஒரு முக்கியமான துறையாக அது இருக்கிறது.

தளபதி அவர்கள், உள்ளாட்சியிலே மேயராக இருந்த காரணத்தால், அதில் எவ்வாறெல்லாம் செயல்பட வேண்டுமென்று பல ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அவரையும், கலைஞரையும் நான் மனதார வணங்குகிறேன். எங்களோடு இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எங்களுடைய இளவல், உதயா அவர்கள். இந்த இயக்கத்தின் வருங்கால நம்பிக்கையாக இருக்கக்கூடியவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, இந்த இயக்கத்திலே தொடர்ந்து கிட்டத்தட்ட 40-45 ஆண்டுக்காலம் எங்களை ஆளாக்கி, உருவாக்கியவர் கலைஞர் அவர்கள், அதனைத் தொடர்ந்து தளபதி அவர்களும் என்னை ஆளாக்கினார்கள்.

அவர், இந்தக் கட்சி சொன்ன வேலையை, பொதுமக்களின் நலன்கருதி, எந்தப் பணியாக இருந்தாலும் அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்ற ஒரு பணியாளராக நான் இயங்கிக் கொண்டிருக்கிறேன். நகராட்சித் துறையிலே நான் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

### திருப்புகழ் கமிட்டி அறிக்கை முழு ஒத்துழைப்பு தருவோம்!

இங்கே உறுப்பினர் முனைவர் சௌமியா அன்புமணி அவர்கள் உரையாற்றும்போது, திருப்புகழ் கமிட்டியின் அறிக்கையை நீங்கள் ஏன் சபையிலே வைக்கவில்லை என்று இரண்டுமுறை கேட்டிருந்தார்கள். சென்னை மழைவெள்ள பாதிப்புகளை தடுப்பதற்கான வழிகளை ஆராய ஓய்வுபெற்ற I.A.S., அதிகாரி வெ. திருப்புகழ் அவர்களின் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு

3.11.2022 அன்று இடைக்கால அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. மேலும்,

14.3.2023 அன்று இறுதி அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பித்தது.

அப்போது தலைமைச் செயலாளராக இருந்த வெ. இறையன்பு, ஐ.ஏ.எஸ் அவர்கள் மற்றும் அப்போது சென்னைப் பெருநகராட்சி ஆணையராக இருந்தவர் ககன்தீப் சிங் பேடி, I.A.S., அவர்கள் மற்றும் சில மூத்த I.A.S., அதிகாரிகளின் முன்னிலையில் அப்போதைய முதலமைச்சராக இருந்த எங்கள் தலைவரிடம் அந்த கமிட்டி ஆய்வறிக்கை சமர்ப்பித்தது.

அதில், அவசரகாலத் தீர்வு, நீண்டகாலத் தீர்வு என்ற அடிப்படையில் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன. எங்கள் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அவசரகாலத் தீர்வுக்கான பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். சென்னை வெள்ளத் தடுப்பு பணிகள் என்ற அடிப்படையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் புதிய வடிகால் வடிநீர் அமைப்புகள் பணிகள் உள்ளிட்ட திருப்புகழ் கமிட்டி அளித்த 161 இலக்குகள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இந்த அறிக்கையிலுள்ள அனைத்து பரிந்துரைகளின்மீது நடவடிக்கை எடுத்தும், குறிப்புகளை இப்பேரவையில் வைக்க வேண்டுமென்ற பணிகளை மேற்கொண்டிருந்த சமயத்தில், தேர்தல் வந்துவிட்ட காரணத்தால், அதை வைக்க இயலாமல் போய்விட்டது. இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள். அக்கமிடியின் இறுதி அறிக்கையை தாராளமாக அவையில் வையுங்கள். மீதமுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுங்கள். எங்களுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை. நாங்கள் முழு ஒத்துழைப்பையும் தருகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறோம். இந்த நேரத்தில் திருப்புகழ் கமிட்டியின் அறிக்கை குறித்து சொன்னவர்களுக்கு இதனைத் தெரிவித்துக்கொள்கி றோம்.

இங்கே தலைவர் அவர்களால் வளர்க்கப்பட்ட எனக்கு, எங்கள் துறை அதிகாரிகளினுடைய ஆதரவு என்பது மிகச் சிறப்பாக இருந்தது. நான் முதன்முதலில் மின் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது டி.வி. அந்தோணி அவர்கள்தான் TNEB Chairman. அவருடைய காலத்தில்தான் வடசென்னையில் 2,200 ஏக்கர் அளவிலே நம்முடைய கலைஞர் அவர்கள் ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களை அழைத்து வந்து அடிக்கல் நாட்டி புதிய அனல்மின் நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. எங்களுடன் செயலாளர்களாக இருந்தவர்களில் தொடர்ந்து 5, 6 செயலாளர்களும் பதவி உயர்வு பெற்று தலைமைச் செயலாளர்களாகப் பணியாற்றி யிருக்கிறார்கள். அவர்கள் சாரங்கி, திரிபாதி, திருமதி மாலதி, சிவ்தாஸ் மீனா ஆகியோராவர். தற்போதைய தலைமைச் செயலாளர் அவர்கள்கூட எங்களுடைய இலாகாவிலேயே ஒரு துறைக்கு அதிகாரியாகப் பொறுப்பு வகித்தார். ககன்தீப் சிங் பேடி அவர்கள் எங்களுடைய மாநகராட்சியின் ஆணையராக இருந்தார். இந்த சென்னை மாநகராட்சியின் வெள்ளத் தடுப்புப் பணிகளை முழுமையாக அறிந்தவர் என்கிற வகையிலே அவரும் பல பணிகளைச் செய்திருக்கிறார்.

எனவே, உணவுத் துறையில் எம். ராமு ஆக இருந்தாலும் திருச்சி மாவட்டத்தின் முதல் பெண் ஆட்சித் தலைவர் திருமதி சாந்த சீலா நாயர் அவர்கள்தான் எங்கள் கிராமத்திற்கு முதல்முதலில் வந்தார். எனக்கு உணவுத் துறை ஆணையராக இருந்தார். இப்போது இருக்கிற உணவுத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் அரிசியை தற்போது 40 இலட்சம் டன், 50 இலட்சம் டன் அரிசியை இலகுவாகப் பெறுவதைப்போல 1996 ஆம் ஆண்டு காலகட்டங்களில் அப்படி அரிசி கிடைக்காது. Affluent group, Middle income group, Lower income group என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு ஒன்றிய அரசு தருகின்ற விலையிலே அரசாங்கம் பணம் செலுத்தி அதை வாங்க வேண்டும். அவ்வாறு வாங்குவதற்கு வரும்போது ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசிடம் சென்று கேட்டு அவற்றைப் பெறுவது என்பது மிகச் சிரமமாக இருக்கும்.

ரேஷனில் ஒரு பிரச்சினை என்று சொன்னால், அன்றைக்கு அது மிகப் பெரிய பிரச்சினையாக வந்துவிடும் என்கிற காரணத்தால் கலைஞர் அவர்கள் அடிக்கடி அதை டெல்லிக்குச் சென்று பார்க்கச் சொல்வார்கள். எனவே, அந்தக் காலகட்டத்தில் திருமதி சாந்த சீலா நாயர் அவர்கள் உணவுத் துறை ஆணையராக இருந்தார்கள். அவரிடம் நான், ஏன் நாம் அரிசியை அதிகமாக உபயோகப்படுத்துகிறோம்; கோதுமையை அறிமுகப்படுத்தலாம் என்று கேட்டபோதுஅவர் ஒரு நல்ல IAS அதிகாரி. இந்த நாட்டின் மீதும், விவசாயிகள் மீதும் ஒரு நல்ல எண்ணம் கொண்டவர். எந்த காலத்திலும் அந்த முடிவை நீங்கள் எடுத்துவிடாதீர்கள். நம் விவசாயிகள் உற்பத்தி செய்வது அரிசிதான். அந்த அரிசியை மட்டும்தான் நாம் சொல்ல வேண்டுமென்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல அதிகாரிகள் எங்களுக்கு ஆலோசகர்களாக இருந்திருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையில் சாரங்கி அவர்கள் இருந்தபோது 15 ஆயிரம் புதிய பேருந்துகள் அப்போதுதான் வாங்கப்பட்டன. எனவே, ஒவ்வொரு துறையிலும் இருக்கிற அனைத்து அதிகாரிகளும் ஆதரவோடு சொல்கிற கருத்துகளை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களாக இருந்தாலும், முதலமைச்சராக இருந்த தளபதியாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அத்தனை நிதியையும் ஒதுக்கித் தந்தார்கள். அந்த நிதியை ஒதுக்கித் தந்தால்தான் அமைச்சர்களால் செயல்பட முடியும்.

### கழக ஆட்சியில் பல நல்ல திட்டங்கள்!

இப்போதுகூட நகராட்சித் துறையிலே நமக்கு முதலில் 44 சதவிகிதம்தான், ஊராட்சிக்கு 56 சதவிகிதம். உள்ளாட்சித் துறையை இரண்டாகப் பிரித்துவிட்டார்கள். எனவே, 44 சதவிகிதம்தான் இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக 5 சதவிகிதம் உயர்த்தி 49 சதவிகிதம் என உயர்த்தி, ஒவ்வோர் ஆண்டும் 24 ஆயிரம் கோடி, 26 ஆயிரம் கோடி என்று ஐந்தாண்டு காலம் நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்கள் தீட்டப்பட்டன. இதுபோல நிதி ஒதுக்கிய காரணத்தினால்தான் தமிழ்நாட்டில் பல நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. குறிப்பாகக் குடிநீர் திட்டங்களை எடுத்துக்கொண்டால், கலைஞர் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் என்பதை 1970 ஆம் ஆண்டு தொடங்கினார்கள். அதிலே முதலில் ஆழ்துளைக் கிணறு போடப்பட்டது. பிறகு ஆறுகளில் கிணறுகள் தோண்டப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. அப்படிப் பார்த்தால் சென்னையில் 900 MLD, மற்ற அனைத்து நகரங்களையும் சேர்த்து 1900 MLD. இந்த ஐந்தாண்டுகாலத்தில் எல்லா நகரங்களுக்கும், சென்னையையும் சேர்த்து கிட்டத்தட்ட 5,000 MLD குடிநீர் திட்டம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்களை உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, ஒகேனக்கல் இரண்டாவது திட்டம். திருவண்ணாமலையினுடைய அமைச்சராக இருந்த வேலு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ரூ.14 ஆயிரம் கோடி செலவிலே வேலூரில் ஒரு பகுதி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் என்று அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் திட்டங்கள். நம்முடைய ஐ.பி. அவர்கள் இருக்கிறார்கள். திண்டுக்கல்லுக்கு அந்தத் திட்டம் வேண்டுமென்று கோரியதால் ரூ.400 கோடி. குளித்தலைக்கும் மருங்காபுரிக்கும் சேர்த்து 1,900 கோடி ரூபாய். இவ்வாறு 18 ஆயிரம் கோடிக்கு புதிய திட்டங்கள் தீட்டப்பட்டன. தமிழ்நாடு அரசு சார்பாக ரூ.5,500 கோடி நிதியும் அதற்காக ஒதுக்கப்பட்டுவிட்டது. தமிழ்நாடு அரசினுடைய பங்குத் தொகை தரப்பட்டுவிட்டது. ஜல் ஜீவன் திட்டத்தில் ஒன்றிய அரசு நிதி கொடுக்காத காரணத்தினால் அந்தத் திட்டங்கள் அப்படியே நிறைவேற்றப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தற்போதுள்ள அமைச்சர்கள் எல்லாம் புதிதாக வந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே தமிழ்நாடு அரசு சார்பாக ஒதுக்கப்பட்ட அந்தத் திட்டங்களை நீங்கள் மீண்டும் தொடங்கி அனைத்து இடங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நம்முடைய தளபதி அவர்களுடைய 5 ஆண்டுகால ஆட்சியிலே கிட்டத்தட்ட 2,000 MLD கூடுதலாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. சென்னை மெட்ரோ, பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக, அதுதொடர்பான பல்வேறு திட்டங்கள் வடசென்னையிலே, வடசென்னை வளர்ச்சித் திட்டங்கள் நம்முடைய சேகர்பாபு அவர்கள் பொறுப்பு வகித்த துறையிலிருந்தும் சிங்காரச் சென்னை திட்டத்தின்கீழ் தற்போது கூட நமது கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது, கூடுதலாக நிதி ஒதுக்கித் தருகிறோம் என்று கொடுத்திருக்கிறார்கள்.

கிட்டதட்ட 60, 70 ஆண்டுகளாக குழாய்களை மாற்றவும், அந்தக் குழாய்களுக்கு புதிய குழாய்கள் அமைக்கவும், பாதாள சாக்கடைத் திட்டங்களை உண்டாக்குவதற்குரிய அந்தப் புதிய திட்டங்களை பெரிய குழாய்கள் அமைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன. சென்னையில் பெரு வெள்ளம் வந்தபோது, நீங்கள் அந்த குடிநீர் வடிகால், Chennai Metropolitan Water Supply and Sewerage Board மூலமாக இறைக்கப்பட்ட மோட்டார்கள் எல்லாம், மோட்டார்கள் பள்ளத்தில் இருந்த காரணத்தினால், அங்கு மோட்டார்களும் பழுதுபட்டு தண்ணீர் உடனடியாக இறைக்க,. . .

**பேரவைத் தலைவர்:** உறுப்பினர், குறுக்கீட்டிற்கு கொஞ்சம் பொறுங்கள். இன்னும் நீங்கள் மானியக் கோரிக்கையின் மீதே வரவில்லை. இன்றைய மானியக் கோரிக்கைக்குள் வராமல் நீங்கள் மற்ற விஷயத்தை, பயனுள்ள கருத்துகளை சொல்லிக்கொண்டுதான் வருகிறீர்கள். ஆனால், ஏற்புடைய இன்றைய மானியக் கோரிக்கையின்மீது நீங்கள் சொன்னால், அமைச்சர்களுக்கும், மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.

### சென்னையில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தது கழக அரசு!

**கே.என். நேரு:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், மெட்ரோ திட்டமும், நகராட்சித் துறையும் ஆகிய மூன்றும் இணைந்ததுதான் இந்தத் துறை.

துறையில்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். அனைத்து மோட்டார்களும் புதிதாக மாற்றப்பட்டு, புதிய மோட்டார்கள் அமைக்கப்பட்டு உயரமாக வைத்து, வெள்ளம் வந்தாலும் அந்தத் தண்ணீரை இறைக்கக்கூடிய நிலையை உருவாக்கியது metro திட்டம். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 240 MLD தண்ணீர், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நம்முடைய தளபதி அவர்கள் அதை உருவாக்கித் தந்தார்கள். இப்போது 540 MLD தண்ணீர் தந்து சென்னையினுடைய குடிநீர்த் தேவையை 890 MLDயிலிருந்து 1100 MLD ஆக உயர்த்திக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு, தளபதியினுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### ஆறுகள் தூர் வாருதல்!

எனவே, குடிநீர் வழங்கல் துறை அல்லது Chennai metro water திட்டங்கள் அனைத்தும் நம்முடைய ஆட்சியிலே, புதிதாக முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். கூவத்தையும், அடையாறையும் சீர் செய்ய போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை கொஞ்சம், ஏற்கெனவே நாங்களும் முயற்சித்ததுதான். கூவத்தைச் சரி செய்ய வேண்டுமென்று கலைஞர் அவர்களும் முயற்சித்ததுதான். என்ன சங்கடம் என்று சொன்னால், சென்னையில் 540 இடங்களில் அந்தக் கழிவுநீர் ஆங்காங்கு கலக்கிறது. அடையாறிலும் கலக்கிறது, கூவத்திலும் கலக்கிறது. சரி, அந்த 540 இடங்களில் கலக்கிற அந்தக் குடிநீர் திட்டத்தில், ஒரு நாளைக்கு 1,300 MLD கொடுக்கிறோம்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்